# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 231/நகராட்சி/2018**
**நாள் : 28/01/2019**

**திரு A.M. முபாரக் அலி,**
**திண்டுக்கல்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஒட்டன் சத்திரம் நகராட்சி.**

– **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல், வார்டு எண்.15, ஆண்டாள் நகர், இரண்டாவது தெரு, 49/2 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.M. முபாரக் அலி அவர்களின் 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 231/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தான் தாக்கல் செய்துள்ள முறையீட்டு மனுவினை விலக்கிக் கொள்வதாக தெரிவித்துள்ள நிலையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல், வார்டு எண்.15, ஆண்டாள் நகர், இரண்டாவது தெரு, 49/2 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு A.M. முபாரக் அலி என்பவர் ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையர் திரு இளவரசன் மற்றும் அந்நகராட்சி அலுவலர் திரு ஈஸ்வரன் ஆகியோர் மீது புகார்களைத் தெரிவித்து அது குறித்து விசாரணை மேற்கொள்ளக் கோரி 06.10.2018 நாளிட்ட மனுவினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தில் தாக்கல் செய்திருந்தார். அம்மனுவினை பரிசீலனை செய்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம் மேற்குறிப்பிட்ட புகார் மனுவின் 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்ய அறிவுறுத்தியதின் அடிப்படையில் முறையீட்டு மனுதாரர் தனது 13.11.2018 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து மதுரை மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் முறையீட்டு மனுதாரரிடம்

03.01.2019 அன்று விசாரணை மேற்கொள்ளும் வகையில், 19.11.2018 நாளிட்ட விசாரணைக்கான அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. விசாரணைக்கான அழைப்பாணையினை பெற்றுக் கொண்ட முறையீட்டு மனுதாரர் தனது உடல் நிலை காரணமாக 03.01.2019 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு தன்னால் வர இயலாத நிலை உள்ளது என்று தெரிவித்து விசாரணைக்கான நாளினை வேறு ஒரு நாளுக்கு மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மனுதாரரின் கோரிக்கையை ஏற்று, 29.01.2019 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு வருமாறு 02.01.2019 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கிடையே முறையீட்டு மனுதாரர் தனது 08.01.2019 நாளிட்ட கடிதத்தில் ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையர் திரு இளவரசன் மற்றும் நகராட்சி அலுவலர் திரு ஈஸ்வரன் மீதான ஊழல் புகார்கள் தனக்கு வந்த தகவல்கள் அடிப்படையில் புகார் செய்ததாகவும், அத்தகவல்கள் உண்மையல்ல எனத் தெரியவந்ததாகவும், மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மீதான தனது புகார் மனுவினை விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்து அதனை ஏற்றுக் கொள்ளக் கோரியுள்ளார்.

3. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் திரு A.M.முபாரக் அலி திண்டுக்கல் மாநகராட்சியைச் சேர்ந்தவர். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையர் மற்றும் அந்நகராட்சி அலுவலர் ஆகியோர் மீது ஊழல் புகார்களைத் தெரிவித்து முதலில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்திற்கும் பின்பு இம்முறைமன்ற நடுவத்திற்கும் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரர், புது டெல்லியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்திய உணவுக் கழக கலந்தாய்வுக்குழுவின் தென்மண்டல உறுப்பினர்களில் ஒருவராக செயல்பட்டு வருகிறார் எனவும் தெரியவருகிறது. மேற்குறிப்பிட்ட பொறுப்பு மிக்க பதவியினை வகிக்கும் முறையீட்டு மனுதாரர் தான் வாழும் திண்டுக்கல் மாநகராட்சியைச் சாராத வேறொரு நகராட்சி உள்ளாட்சி அமைப்பான ஒட்டன் சத்திரம் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி அலுவலர் குறித்து தனக்கு வந்த தகவல்களின் அடிப்படையில் அவர்கள் மீதான ஊழல் புகார்கள் குறித்த உண்மைத் தன்மையினை உறுதி செய்யாமல் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மீதான ஊழல் புகார்கள் உண்மையில்லை எனக் கருதி மனு செய்த இரண்டு மாதங்களுக்குப்பின் அம்மனுவினை விலக்கிக் கொள்வதாகத் தெரிவித்து அதனை ஏற்றுக் கொள்ளுமாறும் கோரியுள்ளார். மனுதாரரின் இச்செயல் ஏற்புடையதல்ல. மேலும், மிகவும் கண்டிக்கத்தக்கது. முறையீட்டு மனுதாரரின் இச்செயலால் இம்முறைமன்ற நடுவம் மற்றும் அலுவலர்களின் கால நேரம் வீணாக்கப்பட்டுள்ளதுடன் பொய் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான சம்பந்தப்பட்ட நகராட்சி அலுவலர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

4. முறையீடு ஒன்றில் அடங்கியுள்ள குற்றச்சாட்டில் பொருள் ஏதுமில்லை என்று முறைமன்ற நடுவர் கண்டுணர்கிறவிடத்து தனது ஆணை ஒன்றினால் செலவினமாகக் குறிப்பிடும் தொகை ஒன்றினை செலுத்துமாறு முறையீட்டாளருக்கு பணிக்கலாம் என 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 8 (2)–இல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரின் குற்றச்சாட்டில் பொருள் எதுவும் இல்லை என்று இம்முறைமன்ற நடுவம் கண்டுணர்ந்துள்ளதால் செலவினமாக ரூ.5,000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) திண்டுக்கல் மாநகராட்சியில் செலுத்தவேண்டும் என முறையீட்டு மனுதாரர் திரு A.M. முபாரக் அலி அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொகையினை முறையீட்டு மனுதாரர் செலுத்தத் தவறும் நிலையில், 1884–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின்படி நிலவருவாய் பாக்கி இருந்தாற்போன்று வசூலிக்கப்பட வேண்டுமெனவும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கும் ஆணையிடப்

படுகிறது. மேலும், இவ்வாணையின்படி முறையீட்டு மனுதாரர் திரு A.M.முபாரக் அலி அவர்கள் செலுத்தும் ரூ.5,000/– ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஒட்டன் சத்திரம் நகராட்சிக் கணக்கிற்கு மாற்றம் செய்யவும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 28–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு A.M. முபாரக் அலி,
எண்.49/2, ஆண்டாள் நகர் 2–வது தெரு,
வார்டு எண்.–15,
S.M.B. பள்ளி பின்புறம்,
திண்டுக்கல் – 624 005.

2. மாநகராட்சிஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்,
திண்டுக்கல் மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
ஒட்டன் சத்திரம் நகராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி